**கொழும்புப் பல்கலைக்கழகம் - இலங்கை**

**கலைப்பீடம்**

**இரண்டாம் வருடக் கலைமாணிப் பரீட்சை – பருவம் I – 2017/2018**

**INR 2122- யுத்தம் தொடர்பான கற்கை**

**நேரம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்**

பகுதி ஒன்றில் உள்ள வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கப்பட வேண்டியதுடன் பகுதி இரண்டில் இருந்து ஏதேனும் இரு (02) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

---

**பகுதி I: கட்டாய வினா**

1. "இரண்டாம் உலக யுத்தத்திற்கு பின்னர் புவிசார் அரசியல் தொடர்புகளை வடிவமைப்புச் செய்வதில் பனிப்போரானது மிகப் பிரதானமானதாக விளங்கியது".
   i. ஐக்கிய அமெரிக்கா (USA) மற்றும் சோவியத் யூனியனுக்கு (USSR) இடையிலான பனிப்போருக்கு (Cold War) இட்டுச் சென்ற காரணிகள் எவை?
   ii. எவ்வாறு பனிப்போரானது ஐரோப்பாவிற்கும் மற்றும் உலகின் ஏனைய நாடுகளுக்கும் தாக்கத்தினை ஏற்படுத்தியது?

---

**பகுதி II: ஏதேனும் இரண்டு (02) வினாக்களுக்கு விடையளிக்குக**

2. உலக யுத்தங்களுக்கு இடையிலான காலப்பகுதியில் (1918-1939) இரண்டாம் உலக யுத்தத்திற்கு இட்டுச் செல்வதற்க்கு தாக்கஞ் செலுத்திய பிரதானமான நிகழ்வுகள் மற்றும் காரணங்கள் யாவை?

3. இரு பகுதிகளுக்கும் விடையளிக்குக
   i. இவ் யுத்தத்தின் போது இரண்டு அணிகளிலும் இருந்த நீர் தெரிவு செய்த இரு தலைவர்களின் தலைமைத்துவ பண்புகளை சுருக்கமாக விபரிக்குக.
   ii. அணுவாயுத குண்டுகள் பயன்படுத்தப்பட்டமையே இரண்டாம் உலக யுத்தத்தின் திருப்புமுனை ஆகும். அது தொடர்பில் உமது கண்ணோட்டத்தை சுருக்கமாக விபரிக்குக.

4. "யுத்தத்தில் சண்டையிடுதல் தொடர்பாக இரு வேறுபட்ட யுத்த தத்துவார்த்தங்களை சன் டசு (Sun Tzu) மற்றும் கால் வொன் குளோஸ்விட்ஸ் (Carl von Clausewitz) முன்வைத்துள்ளனர்".
   i. அவர்களின் கருத்துக்களின் பிரதானமான பண்புகளை சுருக்கமாக விளக்குக.
   ii. யுத்தம் தொடர்பான கற்கையில் அவர்களின் முக்கியமான பங்களிப்பினை கலந்துரையாடுக.

5. "யுத்தமென்பது மனிதருக்குள் காணப்படுகின்ற போட்டியிட்டுக் கொள்கின்ற தேவைகள், வரையறைக்குட்பட்ட வளங்கள், வேறுபட்ட கருத்தியல்கள், வேறுபட்ட நம்பிக்கைகள் மற்றும் வளர்ச்சியடைந்து வருகின்ற சனத்தொகை காரணமாக ஏற்படுகின்ற தவிர்க்க முடியாத விளைவுகளாகும்".

i. மேற்குறிப்பிட்ட கருத்தின் அடிப்படையில் ஏற்படக்கூடிய யுத்தத்தின் வகைப்பாடுகள் யாவை?

ii. அவ் யுத்த வகைப்பாடுகள் இரண்டினது (02) காரணங்களையும், விளைவுகளையும் சுருக்கமாக விபரிக்குக.

6. 21ஆம் நூற்றாண்டில் புவிசார் அரசியல் சூழ்நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் பொருத்தப்பாட்டினை கலந்துரையாடுக.

******************